**MCOP.27/2023 P.W.1-பிரேமா 11.02.2026**

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கில் இறந்துபோன சத்யா எனது மகள். என் மகளுக்கு 2010ல் திருமணம் ஆனது. அவருக்கு 2 மகன்கள் உள்ளனர். அவர் பாலூரில் வசித்தார். 2021ல் விவாகரத்து பெற்று 2 வருடமாக செங்கல்பட்டில் தனியாக வசித்து வந்தார். இந்த விபத்து 17.04.2022 அன்று விடியற்காலை 3.00 மணிக்கு என் மகளுக்கு விபத்து நடந்ததாக எனக்கு தகவல் சொன்னார்கள். விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. இருசக்கர வாகனத்தில் செல்லும் போது அடிப்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாக சொன்னார்கள். என் மகளுக்கு மாதம் ரூ.30,000 வருமானம் கிடைத்தது என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. இந்த விபத்து சம்பந்தமாக செங்கல்பட்டு நகர காவல் நிலையத்தில் யார் புகார் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார். விபத்து ஏற்படுத்திய வாகனம் லாரி. நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தேன். லாரியின் மீது போடப்பட்ட வழக்கு என்ன ஆனது என்று எனக்கு தெரியாது. என் மகளுடன் சந்தோஷ், ஜெயஸ்ரீ ஆகிய இருவரும் இருசக்கர வாகனத்தில் சென்றார்கள். ஜெயஸ்ரீ என் பேத்தி. ஜெயஸ்ரீக்கு அதே விபத்தில் ஏற்பட்ட காயத்திற்கு தாக்கல் செய்யப்பட்ட MCOP.26/2023 வழக்கு இந்த நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். சந்தோஷ் என்பவருக்கு இந்த விபத்தில் காயம் ஏற்பட்டது என்றால் ஞாபகமில்லை. சந்தோஷ் அவருக்கு ஏற்பட்ட காயத்திற்காக இழப்பீடு கோரி இந்த நீதிமன்றத்திலோ அல்லது வேறு நீதிமன்றத்திலோ வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் பேரன்கள் இருவரும் என்னுடன் தான் இருக்கிறார்கள். பெரிய பேரன் 9ம் வகுப்பும், 2வது பேரன் 7ம் வகுப்பும் படிக்கிறார்கள். என் மகள் இறக்கும் போது அவருக்கு வயது 32. என் மகளின் உடற்கூராய்வு அறிக்கை ம.சா.ஆ.2-ல் சந்தியா என்று குறிப்பிட்டு திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் சந்தோஷிற்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. இரவு நேரத்தில் இருசக்கர வாகனத்தில் சென்றதாலும், இருசக்கர வாகனத்தில் 3 நபர்கள் பயணம் செய்ததாலும், அதிவேகமாக வந்ததாலும் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. மோட்டார் வாகன சட்ட விதிகளின் படியும், காப்பீடு விதிகளின் படியும் இருசக்கர வாகனத்தில் 3 நபர்கள் பயணம்

செய்ததால், 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை